T

தூத்துக்குடி மாவட்டம்

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 7×1=7**

1) 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ______

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும், அணிகலன்களும்

2) பொருந்தும் விடையைத் தேர்ந்தெடுக்க

அ) கொண்டல் - 1. மேற்கு

ஆ) கோடை - 2. தெற்கு

இ) வாடை - 3. கிழக்கு

ஈ) தென்றல் - 4. தெற்கு

அ) 1, 2, 3, 4 ஆ) 3,1,4,2 இ) 4,3,2,1 ஈ) 3,4,1,2

3) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

4) "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ______

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5) காசிக்காண்டம் என்பது

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

6) முற்றுப் பெறாத வினை, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது ______

அ) வினையெச்சத் தொடர் ஆ) வேற்றுமைத் தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

7) 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா', 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்: ______

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார்

இ) சந்தக்கவிமணி தமிழழகனார் ஈ) பாரதிதாசன்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளி:- 5×2=10**
(14வது வினா கட்டாய வினா)

8) "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

9) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

www.Padasalai.Net

10) வசன கவிதை - குறிப்பு வரைக.

11) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

12) பெற்றோர் வேலையிலிருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

13) 'வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

14) 'தறிவு' - என முடியும் குறட்பாவினை எழுதுக.

**III.** மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க. (18-வது வினா கட்டாய வினா) **3×3=9**

15) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

16) சோலைக் (பூங்கா) காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க

17) வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்று வரும் அணியை விளக்குக

18) 'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**IV.** எவையேனும் மூன்றிற்கு மட்டும் விடையளிக்க: **3×2=6**

19) சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க
அ) இன்சொல் ஆ) மலை வாழ்வார்

20) கலைச்சொல் தருக. i) Vowel ii) Tornado

21) பழமொழிகளை நிறைவு செய்க
அ) உப்பில்லாப் ________ ஆ) அளவுக்கு ________

22) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) மலை - மாலை ஆ) விடு - வீடு

**V.** பின்வரும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. **2×5=10**

23) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

24) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**VI.** ஒரு பக்க அளவில் ஏதேனும் ஒன்றிற்கு விடையளிக்க: **1×8=8**

25) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

26) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

********

www.Padasalai.Net